யாழ் நகரின்
தரமான
போட்டோ ஸ்ரூடியோ
பிரதிக்கு
ஞானப் ஸ்
ஸ்ருடியோ
301, Clock Tower Road
JAFFNA
T'Phone: 23067

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

கலர் பிலிம் சுருள்கள்
கூடிய விரைவில் கழுவிக்
(Proccessing & Printing)
கொள்வதற்கு
ஞானப் ஸ்
ஸ்ருடியோ
போஸ்கட் பிரதி ஒன்று
ரூ 5.75
நெகடிவ் ஆக்குவதற்கு
(Proccessing) இலவசம்!
301, Clock Tower Road,
JAFFNA. T'Phone: 23067

Nallur Branch Library

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு வைகாசி மீ 18 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ரம்ழான் பிறை 22 (01 06 1986) UTHAYAN - A NVI BY TAMIL DAILY கதிர்: 166

# உதயதேவி ரயிலில் குண்டுவெடிப்பு - 18 பேர் பலி

## தெற்கில் அடுத்து தொடுத்து இரண்டு நாட்கள் சம்பவங்கள்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜூன் 1

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு வந்துகொண்டிருந்த உதயதேவி ரயிலில், வியாங்கொடையில் வைத்து நேற்று மாலை குண்டு வெடித்தது.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தினுல் பதினெட்டு பேருக்குக் குறையாமல் இறந்ததாகக் கணக்கிடப்பட்டது.

ரயிலில் கொமாண்டோக்கள் வந்ததால் அவர்களுக்குக் குறிவைத்தே குண்டு வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. எனினும் அவர்கள் பொல்காவலையில் இறங்கிவிட்டனர்.

தென்னிலங்கையில் இரண்டு நாட்கள் அடுத்தடுத்து நடந்த இரண்டாவது குண்டு வெடிப்புச் சம்பவம் இதுவாகும்.

வியாங்கொடையில் இருந்து ரயில் புறப்பட்ட சில விஞடிகளில் குண்டு வெடித்தது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

நேற்றுக் காலை 8.35 மணியளவில் மட்டக்களப்பில் இருந்து ரயில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

கல்லோயாவில் வைத்து திருகோணமலையில் இருந்து வந்த மூன்று பயணிகள் பெட்டிகள் இந்த ரயிலுடன் இணைக்கப்பட்டன.

அதன் பின்னர் ரயில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. மட்டக்களப்பில் 100 பேர் வரையுமே கொழும்பு செல்வதற்கான டிக்கெட்டை பெற்றிருந்தார்கள்.

### பயங்கரச் சத்தம்

பிற்பகல் சுமார் 4 மணியளவில் வியாங்கொடைக்கு ரயில் வந்து சேர்ந்தது. வியாங்கொடை ரயில் நிலையத்தில் இருந்து ரயில் புறப்பட்ட சில விஞடிகளிலேயே ரயில் பெட்டியில் இருந்த குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்தது.

மெதுவாக ஓடிக்கொண்டிருந்த நேரத்திலேயே குண்டு வெடித்தது. பெட்டிகளின் சிதைவுகள் ஆயிரம் யார்களுக்கு அப்பால் வீசப்பட்டுக் கிடந்தன.

### திருமலைப் பெட்டிகள் அதிக சேதம்

திருமலையில் இருந்து வந்த ரயில் பெட்டிகள் தான் மோசமாகச் சேதமடைந்தன.

இந்த ரயிலில் வந்ததாகக் கூறப்படும் பொலீஸ் கமாண்டோக்கள் பொல்காவலை ரயில் நிலையத்தில் இறங்கிவிட்டனர் என்று கூறப்படுகிறது.

ரயில் முழு வேகத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் சமயத்தில் குண்டு வெடித்திருந்தால் இன்னும் பயங்கரமான விபத்தாக இருந்து இருக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)



என்ன, மற்ற நாடுகளில் எல்லாம் மாதமும் மாரி மழை பொழியுது. இந்த தர்மிஷ்ட பூமியில ஒரே குண்டுப் பொழிவும் வெடிப்புமாய் இருக்கு...!

### வாகனங்கள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வடக்கில் இருந்து சென்ற வாகனங்கள் சில நேற்று வவுனியாவுக்கும் மதவாச்சிக்கும் இடையில் தாக்குதலுக்கு உள்ளாகின என்று தெரிகிறது.

## கோல்ட் ஸ்ரோர்ஸ் குண்டு வெடிப்புக்கு ஈரோஸ் உரிமை கோருகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 1

கொழும்பு கோல்ட் ஸ்ரோர்ஸ் (குளிர்பானக் களஞ்சியம்) குண்டுவெடிப்புக்கு ஈரோஸ் உரிமை கோரி உள்ளது.

இது தொடர்பாக ஈரோஸ் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு;-

கடந்த சில வாரங்களாக கிழக்கு மாகாணத்தில் ஆலங்கேணி, புல்லுமலை முதலான கிராமங்களில் அப்பாவித் தமிழ் மக்களைச் சுட்டுக் கொன்றும்-

வட மாகாணத்தில் விமான, ஹெலிக்கொப்டர் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியும்-

திருமலை அகதிகளை வடக்கு நோக்கி விரட்டியடித்தும்- தனது இராணுவத் தீர்வை ஸ்ரீ லங்கா அரசு விரைவுபடுத்தமுற்பட்ட வேளையில் 30-05-86 அன்று கொழும்பிலுள்ள இராணுவத் தலைமைக் காரியாலயத்துக்கு மிக அண்மையில் உள்ள இலங்கை குளிர்பானக் களஞ்சியம் நிர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் கண்ணிவெடி ஈரோஸே மேற்கொண்டது

### தவறுதலாக உரிமை கோரியதாக புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 1

மூதூர் மாவட்டத்தில் உள்ள பூமாலைவெட்டுவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் ஈரோஸ் இயக்கத்தினுலேயே மேற்கொள்ளப்பட்டது

இதுதொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு;—

வெள்ளிக்கிழமை நண்பகல் மூதூர் மாவட்டத்தில் உள்ள பூமாலை வெட்டு என்னும் இடத்தில் நிகழ்ந்த கண்ணிவெடித் தாக்குதலை நாம் நிகழ்த்தியதாக கூறி வெளியிட்ட அறிக்கை தவருனது.

இத்தாக்குதலைத் தோழமை இயக்கமான ஈரோஸ் இயக்கத்தினரே மேற்கொண்டனர்.

தவறுதலாக உரிமை கோரியதற்கு வருந்துகிறோம்.

பூமாலைவெட்டு வில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இறந்தோர் எண்ணிக்கை 27 ஆக உயர்வு

திருகோணமலை, ஜூன் 1

மூதூர், பச்சனூர்க் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் இறந்த சிப்பாய்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்தது.

சிப்பாய்கள் பயணம் செய்த பஸ்ஸின் சாரதி, ஊழியர்கள் ஐந்து பேரும் இத்தாக்குதலில் உயிரிழந்தனர்.

மொத்தம் இச்சம்பவத்தில் 27 பேர் மரணமானதாக அறிவிக்கப்பட்டது.

## டி. ஆர். மகாலிங்கம் காலமானுர்

பிரபல புல்லாங்குழல் வித்துவானும், தமிழ் சினிமா நடிகரும், பின்னணிப் பாடகருமான திரு. டி. ஆர். மகாலிங்கம் நேற்று மாரடைப்பால் மரணமானுர்.

ஐந்து வயதிலிருந்தே புல்லாங்குழல் வாசிப்பதில் அபார திறமை பெற்றிருந்த திரு. மகாலிங்கம், இறுதிவரை தலைசிறந்த புல்லாங்குழல்வித்பன்னராகவும், கர்நாடக இசைவாணராகவும் மிளிர்ந்தார்.

59 வயது நிரம்பிய இவர், இந்திய அரசின் பத்மஸ்ரீ விருதைப் பெற்றவராவார்.

## செஞ்சிலுவை சின்னம்: வேலை பூர்த்தி

யாழ். ஆஸ்பத்திரிக் கூரைகளில் செஞ்சிலுவைச் சின்னம் பொறிக்கும் வேலைகள் தற்போது முடிவடைந்துள்ளன.

ஆஸ்பத்திரி கூரைகளிலும், பெரிய நீர்த்தாங்கியிலும் இச்சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 19ஆம் திகதி யாழ் ஆஸ்பத்திரி மீது ஹெலிக்கொப்டர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### அடையாளம் காணப்பட்டனர்

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் குளிர்பான ஸ்தாபனத்தில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இறந்தவர்களில் 8 பேர் அடையாளங் காணப்பட்டனர்.

அவர்களில் இரண்டு பேர் தமிழர்கள்.

4 பேர் முஸ்லிம்கள்.

## 7 தமிழரை அழைத்து வரிசையாக நிறுத்திச் சூடு

### தம்பலகமத்தில பயங்கரம்

திருகோணமலை, ஜூன் 1

தம்பலகமம் கிராமத்தில் வெள்ளிக்கிழமை இரவு நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று தமிழர்கள் மரணமானுர்கள்.

ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் சிலர் அக் கிராமத்துக்குச் சென்று ஏழுதமிழர்களைஅழைத்து வரிசையாக நிறுத்தி விட்டுச் சுட்டனராம்.

மூன்று பேர் அந்த இடத்திலே இறந்தனர். இருவர் திலகரத்தினம், சௌந்தரராஜன் என்று அடையாளங் காணப்பட்டனர்.

மூன்றுவது நபரின் சடலம் அடையாளங் காணப்படவில்லை.

இரண்டுபேர் காயம் அடைந்தனர். ஏனைய 2 பேர் தப்பிச்சென்று விட்டனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து தம்பலகமம் கிராமத்தில் இருந்து மக்கள் இடம் பெயரத் தொடங்கி உள்ளனர்.

## ஆனையிறவைத் தாண்டி லொறிகள் பொருளுடன் செல்லத்தடை

கொழும்பு, ஜூன் 1

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து லொறிகள் பொருள்களுடன் ஆனையிறவைத் தாண்டிச் செல்லத் தடை விதிக்கப்படும்.

வெற்று லொறிகள்தான் ஆனையிறவைத் தாண்டித் தெற்கே செல்ல அனுமதிக்கப்படும்.

இது சம்பந்தமான உத்தரவு உடனடியாக அமுலுக்கு வரும் என்று அரசாங்க வட்டாரங்களில் இருந்து அறியவந்தது.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தை தொடர்ந்து பாதுகாப்பு உயர்மட்ட அதிகாரிகள் மாநாடு ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

அங்கு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டதாக நம்பிக்கையாகத் தெரிய வந்தது.

★ முதலாவதுகட்டநடவடிக்கையாக யாழ்குடாநாட்டில்இருந்துபொருள்களுடன் லொறிகளை ஆனையிறவைத் தாண்டி வெளியே செல்ல அனுமதிப்பது இல்லை என்று மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

இதன்படி வெற்று லொறிகள்தான் ஆனையிறவைத் தாண்டி வெளியே செல்ல அனுமதிக்கப்படும்.

இந்த உத்தரவு உடன

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வாகனங்கள் யாழ் திரும்பின

நல்லூர், ஜூன் 1

கொழும்பு சென்ற பஸ்கள், லொறிகள் உட்பட சகல வாகனங்களும் நேற்று பளையுடன் திருப்பி அனுப்பப்பட்டன.

பளையில் நின்ற இளைஞர் கோஷ்டியே இவ்வாறு வாகனங்களை திருப்பி அனுப்பியது.

இதன் காரணமாக சகல வாகனங்களும் பளையுடன் தமது சேவையை ரத்து செய்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பின.

### பண்ணை விடுதியில் இருந்து துப்பாக்கிச் சூடு

நல்லூர், ஜூன் 1

நேற்று யாழ்நகரில் ஹெலிக்கொப்டர் தாழப்பறந்து சென்றபோது பண்ணை விடுதியில் இருந்த சிப்பாய்கள் நகர்ப் பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

நேற்று 3 மணி அளவில் இச் சம்பவம் நடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உயிர் தப்ப நடைதான் ஒரே ஒரு வழி - அத்துலத்

கொழும்பு, ஜூன் 1

நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் இருந்து சிப்பாய்கள் தப்ப ஒரே ஒரு வழிதான் உண்டு. அது நடந்து செல்வதே.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்றுச் சொன்னுர்.

ரத்மலானை தம்ம பாடசாலை நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது;

தெஹிவத்தையில் இருந்துமூதூருக்குநடந்து சென்றசிப்பாய்கள் திரும்புகையில் பஸ்ஸில் ஏறிச் சென்றதால்தான்கண்ணி வெடியில் சிக்க வேண்டியதாயிற்று. நடந்துசென்றிருந்தால் இந்தநிலை வந்திருக்குமா?

மேலிடத்து உத்தரவுகளை மீறிச் செயல்பட்டதால்தான் இந்த நிலை. உத்தரவுகளை மீறிச் செயல்படும் இராணுவத்தினர் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கொடுக்கப்பட்ட ஆலோசனைகளைப் பின்பற்றி நடந்திருந்தால் கொழும்பு குளிர்ப்பானத் தொழிற்சாலையிலும் குண்டு வெடிப்புச் சம்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகரிலிருந்து 54 பைந்து இரத்தம்

நல்லூர், ஜூன் 1

யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு நேற்று 54 பைந்து இரத்தம் வழங்கப்பட்டது.

குருநகர் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களே இவ்வளவு பைந்து இரத்தத்தை யாழ் ஆஸ்பத்திரிக்கு நன்கொடையாக வழங்கினர்.

குருநகர் லயன்ஸ் கழகத்தில் வைத்தே நேற்று இரத்ததானம் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளையும் குருநகர் லயன்ஸ் கழகமே மேற்கொண்டிருந்தது.

கடந்த சில காலங்களாக யாழ் ஆஸ்பத்திரியில் இரத்தத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்து இரத்ததான வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது.

தற்போது ஓரளவு இரத்தம் வங்கியில் இருப்பதால் நோயாளர்களுக்கு வேண்டிய இரத்தம் வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கோட்டை முகாமுக்கு அருகில் உள்ள கடைகள் இடம்மாற்றம்

நல்லூர், ஜூன் 1

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியில் இருந்து தபால்கந்தோர் வரையுள்ள வீதியில் அமைந்துள்ள கடைகள் சில இடம் மாற்றம் செய்யப்படுகின்றன.

கடந்த சில வாரங்களுக்கு முன் யாழ்நகரில் நடைபெற்ற போராளிகள் - சிப்பாய்கள் மோதலையடுத்து இக்கடைகள் அனைத்தும் முற்ருக இழுத்து மூடப்பட்டிருந்தன.

பொதுமக்களும் இந்த வீதியைப் பயன்படுத்துவதை தவிர்த்துவந்ததை அடுத்தே இந்த இடம் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த வீதியில் சுமார் ஐம்பது கடைகள் உள்ளன.

பெரும்பாலான கடைகள் கே. கே. எஸ். வீதி, மனோகராச் சந்திக்கு அருகாமையிலேயே இடம் மாற்றம் செய்யப்படுகின்றன.

### சுப நேரம்

1 — 06 — 1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:

8·52முதல் 10·22 வரை

ராகுகாலம்:

4·22முதல் 5·52வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நவமி நண்பகல் 11·54 வரை

### நோன்பு நேரம்

| | |
|---|---|
| சஹார் | 4·18 |
| மஃரிப் | 6·24 |

## கல் ஏற்றி வந்த வாகனங்கள் ஆனையிறவில் தடுத்து வைப்பு

கிளிநொச்சி, ஜூன் 1

யாழ்ப்பாணத்திலிருந்து கல் ஏற்றி வந்த வாகனங்கள் ஆனையிறவு தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டன.

பெர்மிட் இல்லாததே இவை தடுத்து வைக்கப்படக் காரணம் ஆகும்.

இந்த வாகனங்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிகிறது.

கல் ஏற்றிச் செல்வதற்கு பெர்மிட் தேவையென யாழ். அரசாங்க அதிபரினுல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைத் தொடர்ந்தே ஆனையிறவில் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கு வெளியே கல் கொண்டு செல்ல பெர்மிட் வேண்டுமென்ற அறிவித்தலைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட மக்களும், வாகனச் சொந்தக்காரர்களும் பெரிதும் பாதிக்கப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாடு பாண்டிச்சேரியில் நேற்றுபூரணஹர்த்தால்

சென்னை, ஜூன் 1

தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களில் நேற்று சனிக்கிழமை பூரண ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களில் இருக்கும் அரசியல் கட்சிகள் கூட்டாக நடத்திய நான்காவது ஹர்த்தால் இதுவாகும்.

மே 31 இல் பூரண ஹர்த்தாலை நடத்தும்படி தமிழக மக்களுக்கு தி.மு.க. தலைவர் கலைஞர் கருணுநிதிதான் முதலில் அழைப்பு விடுத்திருந்தார்.

அதன் பின்னர் அனைத்துக் கட்சி மாநாட்டை மாநில முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் கூட்டி 31ஆம் திகதி பூரண ஹர்த்தால் நடத்த முடிவுசெய்தார்.

ஹர்த்தால் முழுமையாக, அமைதியாக நடைபெற்றது என்று தலைமைச் செயலாளர் திரு. பி. வி. அந்தோனி தெரிவித்தார்.

சாலைகள் வெறிச்சோடிக்காணப்பட்டன. விமா

(4 ஆம் பக்கம் பார்க்க )

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் இருந்து

# தெற்கே செல்லும் வாகனங்கள் பலத்த சோதனை

கிளிநொச்சி, ஜூன் 1

கொழும்பு குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து வடக்கிலிருந்து தென்பகுதி நோக்கிச் செல்லும் சகல வாகனங்களும் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் இருந்து வாகனங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் நுழையும் போது முதல் தடவையாக ஆனையிறவிலும், இரண்டாவது தடவையாக கிளிநொச்சி முகாமிலும் சோதனையிடப்படுகின்றன.

இந்த இரு இடங்களிலும் லொறிகளில் வரும் சகல பொருள்களும் இறக்கப்பட்டே சோதனையிடப்படுகின்றன.

இதனால் வடக்கிலிருந்து தென்பகுதி நோக்கிப் பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் பல மணி நேரம் ஒவ்வொரு முகாமிலும் தரித்து நிற்க வேண்டியுள்ளது.

கிளிநொச்சி, ஆனையிறவு முகாம்களில் தினமும் 50க்கு மேற்பட்ட லொறிகள் சோதனைக்காக பலமணி நேரம் தாங்கிக்கிடப்பதனைக் காண முடிகிறது.

இச்சிரமங்கள் காரணமாக தென்பகுதிக்கான வாகனப் போக்குவரத்துக்கள் மிகவும் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சுகாதார நிலையத்துக்கு அன்பளிப்பு

வட்டுக்கோட்டை ஜூன் 1

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகச் செயலாளர் திரு எஸ் ரி வைத்திலிங்கம் சங்கரத்தை சுகாதார நிலையத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க கட்டில் ஒன்றும் கதிரைகள் இரண்டும் அன்பளிப்புச் செய்துள்ளார்

பொதுநல ஸ்தாபனங்களுக்கு இப்படியான நன்கொடைகள் ஊக்கமளிப்பதாக அமையும் என நிலைய நிர்வாகிகள் தெரிவித்தனர்

## அதிக மரங்களால் அநேக நன்மைகள்

வட்டுக்கோட்டை, ஜூன் 1

முன்னோர்கள் சிரமத்துடன் மரங்களை நட்டு வைத்தனர். பலனை இன்று அனுபவிக்கின்றோம். எதிர்காலத்தில் விறகுப் பஞ்சத்தைப் போக்கவும், மண்வளத்தைப் பாதுகாக்கவும் நாமும் மரங்களைத் தாராளமாக நடல் வேண்டும்.

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்திய சாலையில் நடைபெற்ற மரம் நடும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தொழில் அதிபர் திரு. க. கனகராசா இவ்வாறு தெரிவித்தார்.

விழாவிற்குத் தலைமை வகித்த வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர். இ. செல்வநாயகம் பேசும் பொழுது,

'மிகப் பின்தங்கிய கிராமத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த வைத்திய சாலை பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, இளவாலை முதலிய பகுதி மக்களின் வைத்திய நிலையமாக விளங்குகின்றது.

சுமார் 35 வருடங்களாக அபிவிருத்தி வேலைகள் எதுவுமே இங்குமேற்கொள்ளப்படாதது மிகவும் கவலை தருவதாக உள்ளது.

இந்த நிலை மாறவேண்டும். மக்களின் ஆர்வத்தினால் இவ்வைத்தியநிலையம் விரைவிலேயே அபிவிருத்தியடைய வேண்டும்' என்றார்.

தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் திரு. ச. தம்பிராசா, பண்டத்தரிப்பு பயிர் செய்கை அலுவலர் திரு. ச. நாராயணன், பண்.பநோ.கூ.ச. தலைவர் திரு. ஆ.யேசுதாசன் ஆகியோரும் உரையாற்றினர்.

### இடமாற்றம்

யாழ்ப்பாண அபிவிருத்திச்சபை புலோலி உபஅலுவலக ஆயுர்வேத வைத்தியர் டாக்டர் எஸ். வேலும் மயிலும் நெல்லியடி கட்டைவேலி உப அலுவலக ஆயுர்வேத வைத்தியசாலைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளார்.

## சிந்து பைரவியை செதுக்கிய சிந்தனைச் சிற்பி பாலசந்தர்

1986 ஆம் ஆண்டிற்கான சிறந்த நடிகை சுஹாசினி—

சிறந்த இசையமைப்பாளர் இளையராஜா—

சிறந்த பின்னணிப் பாடகி சித்ரா—

இவர்கள் மூவருக்கும் தேசிய விருதைப் பெற்றுத்தந்த சிந்தையைக் கவரும் சித்திரமான 'சிந்து பைரவி' யைச் செதுக்கிய சிந்தனைச் சிற்பி கே. பாலசந்தர் தான்.

பாலசந்தர் சொல்கிறார்:-

'இதுநாள் வரை வடமாநிலத் தவருக்கே சென்றுகொண்டிருந்த விருதுகள் இம்முறை ஒட்டு மொத்தமாகத் தென்னகத்தின் பக்கம் திரும்பி இருப்பதில் மகிழ்ச்சி.

தமிழ்ப் படங்களுக்கு விருது அளிக்கப்பட்டிருப்பதால்தமிழகத்திற்கே பெருமை. விருது கமிட்டியில் எந்த பாரபட்சமோ, பாகுபாடோ இல்லை என்பதற்கு இது நல்ல உதாரணம்.

என் படத்திற்கு இவ்வளவு விருதுகள் வந்திருக்கின்றன என்றால் அது எனக்குக் கிடைத்தது மாதிரித்தான்.

சிறந்த டைரக்டர் விருது கிடைக்கவில்லையே என்று ஆதங்கமா என்றால் நிச்சயமாக இல்லை. அந்த விருது வரும் போதுஎனக்கு வரட்டும்' என்றார் பாலசந்தர்.

தினசரி சினிமா

## பழமையும் புதுமையும் இணைந்த இலக்கியப்படைப்பு

### நூல் வெளியீட்டு விழாவில் உரை

பலாலி, ஜூன், 1

திரு. பாலசுந்தரத்தின் இலக்கியத்தில் யாழ்ப்பாணத்தின் பாரம்பரியத்தைக்காண்கின்றேன். யாழ்ப்பாணத்தின் கலை கலாசாரத்தின் பிரதிபலிப்பை உணர்கின்றேன். பழமையையும்-புதுமையையும் இணைத்து பழமைக்குப் புத்துணர்வு அளிக்கப்பட்டுள்ளது.

யூனியன் கல்லூரியில் திரு. இராஜகோபால் (செம்பியன் செல்வன்) தலைமையில் யாழ். இலக்கிய வட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'அந்நிய விருந்தாளி' சிறுகதைத்தொகுதி வெளியீட்டுவிழா நடைபெற்றது.

அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆசியுரை நிகழ்த்திய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றுகையில்;

கல்லூரி வளர்ச்சிக்காக மட்டுமன்றி, இப்பகுதிக் கல்விக்காகவும், தனது நேரத்தின் பெரும்பகுதியைச் செலவு செய்யும் அதிபர் சிறுகதை மூலம் யாழ் பாரம்பரியத்தைப் பேணிக் கொள்வதுடன், மொழி, இன நாட்டுப் பற்றுடன் ஆக்க இலக்கியம் படைக்கும் படைப்பாளியாகவும் மிளிர்கின்றார் என்றார்.

யாழ். இலக்கியவட்ட இணைச்செயலாளர் திரு. க. குணராசா (செங்கை ஆழியான்) உட்பட பலர் உரையாற்றினர்.

### வாடகைக்கு

யாழ்நகர் ஞானம்ஸ் ஸ்ருடியோ கட்டிட மேல் மாடியில் சகல வசதிகளுடன் கூடிய மூன்று பெரிய கடைகள் (தனித் தனியாக 325 சதுர அடி விஸ்திரணம்) வாடகைக்கு உண்டு. அலுவலகம், மொத்த விற்பனை நிறுவனம், தொலைத் தொடர்புச் சேவை போன்ற வர்த்தக நிலையங்களுக்கு மிகவும் ஏற்றது. நேரில் தொடர்பு கொள்க; ஞானம்ஸ் ஸ்ருடியோ, இல. 301, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்

Lanka Cement Ltd.,
Kankesanthurai
POST OF PILOT

இலங்கா சிமெந்து லிமிட்,
காங்கேசன்துறை
பதவி - கப்பல் மாலுமி

இலங்கா சிமெந்து லிமிட்டெட் காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பல் மாலுமிக்கான வெற்றிடம் ஒன்று உடனடியாக நிரப்பப்படவுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பப் பத்திரத்துடன் இலங்கா சிமெந்து லிமிட்டெட் உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்துக்கு ஆனி மாதம் ஆறாம் திகதிக்கு முன் சமுகமளிக்கவும்.

மாலுமி தகைமைச் சான்றிதழும் (Master Certificate) சேவைச் சான்றிதழ்களும். 1000 மெற்றிக் தொன் முதல் 40 000 மெற்றிக் தொன் வரையிலான எடையுள்ள கப்பல்களைக் கட்டுவதற்குத் தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

பொது முகாமையாளர்,
இலங்கா சிமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

# காஷ்மீர் முதல் குமரிவரை

## தமிழர் பிரச்சினையில் அக்கறை

### மதுரை மாநாடு நிரூபித்து விட்டது என்கிறது புரொன்ட்லைன்

**காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்திய மக்களின் ஆதரவு இலங்கைத் தமிழருக்கே உண்டு என்பதை மதுரை மாநாடு நிரூபித்துள்ளது**

**இப்படி இந்தியாவில் இருந்து வெளிவரும் "புரொன்ட்லைன்" ஆங்கில சஞ்சிகையில் வெளியான கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.**

**கட்டுரையை எழுதியவர்: மாலினி பார்த்தசாரதி. கட்டுரையின் தமிழாக்கம் இன்று பிரசுரமாகிறது.**

மே 4 ஆம் திகதி.

மதுரைக் குதிரைப்பந்தயத் திடலிலே சன சமுத்திரம்.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்தவரான பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அதல் பிஹாரி வாஜ்பாய் மேடையிலே எழுந்து நிற்கிறார்.

"என் முன்னால் லட்சக் கணக்கான தலைகளைக் காண்கின்றேன். தலைகளின் கடல். புதுடில்லியும் கொழும்பும் இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளட்டும்'

இப்படி உணர்ச்சி வசப்பட்டுக் கூறுகிறார் வாஜ்பாய்.

தி. மு. க தலைவர் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பு நடத்திய மதுரை மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக இந்த பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மதுரை ஹோட்டல் பாண்டியனுக்கு முன்னால் மாபெரும் 'கட் அவுட்'.

கலைஞர் கருணாநிதி. இந்திய நாடாளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியான தெலுங்கு தேசத்தின் தலைவரும் ஆந்திர முதலமைச்சருமான என். டி. ராமராவினை இரு கரம் நீட்டி வரவேற்று அழைப்பது போல் 'கட் அவுட்' இருந்தது.

வீதிக்கு குறுக்கறுத்து அலங்கார வளைவு. இலங்கைத் தமிழர் மீதான அடக்கு முறைச் சம்பவங்களைச் சித்திரிக்கும் வர்ண ஓவியங்கள் வளைவிலே தீட்டப்பட்டிருந்தன.

மதுரை மாநாட்டின் காலை நிகழ்ச்சிகளில் இந்தியாவின் தேசிய எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாரும் கலந்து கொண்டனர்.

காலை மாநாட்டை தொடக்கி வைத்து கலைஞர் கருணாநிதி ஆங்கிலத்திலே உரையாற்றினார்.

"தமிழ் நாடு அரசு காரணமாகவே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் புதுடில்லி அக்கறை காட்டுகின்றது. இப்படி கொழும்பு அரசு அடிக்கடி கூறி வருகிறது.

"இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ்நாடு மட்டும் அல்ல, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை அக்கறை காட்டுகிறது. இதை உங்கள் வருகை நிரூபித்துள்ளது" - இப்படி கலைஞர் கருணாநிதி ஆங்கிலத்திலே முழக்கமிட்டார்.

எதிர்க்கட்சிகளில் ஒன்றான காங்கிரஸ் (எஸ்) தலைவர் எச். என். பஹுகுணா சொன்னார்:

இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை. ஒரு கட்சிக்கு இப்பிரச்சினை சொந்தமானது அல்ல. இது அரசுக்கு மட்டுமே சொந்தமானது போன்று பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையாளப் பார்க்கின்றார்."

திரு.வாஜ்பாய் சொன்னார்:

"இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து எல்லா அரசியல் கட்சிகளுடனும் கலந்து ஆலோசனை நடத்த பிரதமர் தவறி விட்டார்."

தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு கடந்த ஆண்டு மேமாதம் ஆரம்பிக்கப்பட்டது. தனித் தமிழ் ஈழம் கோரிக்கைக்கு ஆதரவாகவே செயல்படத் தொடங்கியது.

நான்கு போராளிகள் அமைப்பைக் கொண்ட ஈழம் தேசிய விடுதலை முன்னணியுடன் இணைந்தும் செயல்பட்டு வந்தது.

முன்னணியில் அங்கம் வகிக்கும் இரண்டு அமைப்புக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக உருவான குழப்பநிலை தமிழ் ஈழ ஆதரவாளர்கள் அமைப்பைக் கவலையடையச் செய்துள்ளது போல் தெரிகிறது.

மதுரை மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்களின் மனதில் இரண்டு அமைப்புக்களுக்கு இடையேயான மோதல்தான் குறிப்பிடத்தக்க இடத்தை வகித்தது.

பெறுமதியான தீர்வு ஒன்றைக் காணுவதற்குரிய சந்தர்ப்பத்தை தவறவிட வேண்டாம் என்று கலைஞர் கருணாநிதி போராளி அமைப்புக்களுக்கு விண்ணப்பித்துக் கொண்டார்.

மாநாட்டில் முதலில் எடுக்கப்பட்ட விஷயமே இரண்டு அமைப்புகள் இடையேயான [illegible]

ஆந்திர முதலமைச்சர் ராமராவ், பாரதிய ஜனதாத் தலைவர் வாஜ்பாய் கூட போராளிக்குழுக்களுக்கு இடையேயான உள் சண்டைகளை நிறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

கலைஞரின் வேண்டுகோளுக்கு இணங்க எல்லாக் குழுக்களும் ஒற்றுமையாகச் செயல்படுவதாக மாநாட்டில் உறுதியளித்தன.

ஆனாலும் இந்த உள் மோதல்கள் தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்புத் தலைவர்கள், தேசியத் தலைவர்கள் ஆகியவர்களின் நிலையை தூரத்தே வைத்து விட்டது.

எல்லா அமைப்புக்களும் தமிழ் ஈழக் கோரிக்கையை மையமாக வைத்து பிரேரணைகளைச் சமர்ப்பித்து இருந்தும், மதுரை மாநாட்டின் இறுதித் தீர்மானத்தில் அவை இடம் பெறும்ற் போனது அதனைத் தெளிவாக உணர்த்திவிட்டது.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியத் தேசியக் கருத்தை உருவாக்குவதில் மதுரை மாநாடு வெற்றி கண்டது என்று சொன்னாலும்,

பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் தோல்வி கண்டதற்காக இந்தியாவைக் குற்றஞ் சாட்டுவது போன்று மாநாட்டின்தீர்மானமும் தலைவர்களின் பேச்சுக்களும் அமையவில்லை.

சுதந்திர தமிழ் ஈழம் கோரிக்கைக்கு ஆதரவாக யுத்தக்குரல் எழுப்பக் கூடியதாகவும் மாநாட்டின் பேச்சுக்களும் தீர்மானமும் அமையவில்லை.

சாத்தியமான அரசியல் தீர்வு பற்றியும் தலைவர்கள் மாநாட்டில் ஆலோசனை நடத்தவில்லை.

இந்திய அரசுக்கு எதிராக குற்றம் சுமத்துவது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை எடுத்துச் சொன்னது.

வேறுபடும் அரசியல் கருத்துக்கள், அந்த வேற்றுமையிலேயும் ஒற்றுமை காணுவதும் கஷ்டமாக இருந்ததினால், இரண்டு விஷயங்களில் மட்டுமே மாநாட்டில் ஒருமனதான அபிப்பிராயம் உருவானது.

ஒன்று, இலங்கையிலே இடம்பெறும் தமிழ் இனப் படுகொலை நிறுத்தப்பட வேண்டும்.

இரண்டாவது, இப் பிரச்சினையினுல் பிராந்திய ரீதியில் ஏற்பட்டு [illegible] குழப்பநிலை இந்திய [illegible] அமைப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக எல்லாத் தலைவர்களினாலும் எடுத்துச் சொல்லப்பட்டது.

மாநாட்டின் இறுதித் தீர்மானம் வருமாறு;

✶ இந்தியாவின் எதிரிகளான வெளிநாட்டுச் சக்திகளுக்கு இலங்கை இடம் கொடுத்துள்ளதால் பிராந்திய அரசியலில் புதிய பரிமாணம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

✶ இலங்கைத் தமிழர் பிரச்சினையை சர்வதேச அரங்குகளில் இந்தியா முழுமூச்சுடன் எடுக்க வேண்டும்.

✶ தற்போதைய ஏனோ தானோ என்ற மத்தியஸ்தர் அணுகுமுறையைக் கைவிட்டு இலங்கைத் தமிழரின் விதியுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட நாடு என்ற முறையில் இந்தியா பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

✶ தமிழர்கள் சமத்துவம், கௌரவம், பாதுகாப்புடன் வாழக்கூடியதான தீர்வைக் காணக்கூடியதான பலனளிக்கக்கூடிய கொள்கைத் திட்டம் ஒன்றை வகுத்து இந்தியா செயல்பட வேண்டும்.

மொத்தமாகச் சொல்லப்போனால் மதுரை மாநாடு, இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி தேசிய அளவில் இந்தியாவில் ஒரு ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது என்பது தெளிவாகின்றது.

### அவதி

ஊர்காவற்றுறை ஜூன் 1

காரைநகர் கடற்படை முகாமிற்கு மிக அண்மையிலுள்ள ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் உள்ள நோயாளர்கள் பலவகையிலும் அவதிக்குள்ளாகின்றனர்.

இரவில் அடிக்கடி நடத்தப்படும் 'ஷெல்' குண்டுகள் தீப்பிழம்பாக வருவதைக் கண்டு நோயாளர்கள் அச்சம் அடைவதாகக் கூறப்படுகிறது.

## கத்தோலிக்க ஆலய வரலாற்று நூல்

வட்டுக்கோட்டை, ஜூன் 1

காங்கேசன்துறை கல்வி வட்டாரத்திலுள்ள கத்தோலிக்க ஆலயங்களின் வரலாற்று நூல் ஒன்று வெகுவிரைவில் வெளிவரவிருக்கின்றது.

இந்த வரலாற்று நூல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று காங்கேசன்துறை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் தலைமையில் இளவாலை சென்கென்றீஸ் கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்திரு. அன்ரன் இராசநாயகம், இளவாலைதிருக்குடும்ப கன்னியர்மடம் வித்தியாலயஅதிபர்சங். சகோதரி விக்ரறின் ஆகியோர் கலந்து கொண்டு நூல் ஆக்கத்திற்கான ஆலோசனைகளை வழங்கினர்.

இளவாலை சென்கென்றீஸ் கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். ஆனந்தராசாவை நூலாசிரியராகக் கொண்டமலர்க்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## பொருட்காட்சி

வட்டுக்கோட்டை, ஜூன் 1

சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் கல்விப் பொருட்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் ஜூன் மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ள இக் கல்விப் பொருட்காட்சியைச் சிறந்த முறையில் நடத்துவதற்கான குழு ஒன்று மேற்படி வித்தியாலய அதிபர் தலைமையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வித்தியாலய ஆசிரியர்கள் திரு. க நல்லையா திரு நா தியாகராசா, திருமதி இராணி ஆறுமுகராசா ஆகியோரைக் கொண்ட இப்பொருட்காட்சிக்குழு பொருட்காட்சி சம்பந்தமான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு வருகின்றது.

அதி உன்னத சத்துணவு

ஜீவாகாரம்
JEEVAHARAM

இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட
உப உணவு

✶ வளர்ந்துவரும் குழந்தைகளுக்கும்
✶ கர்ப்ப தாய்மார்களுக்கும்
✶ பாலூட்டும் தாய்மார்களுக்கும்
✶ போஷாக்குக் குறைவான குழந்தைகளுக்கும்
✶ ஏனைய யாவருக்கும் சிறந்த சத்துணவு,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின், ஆரம்ப சுகாதாரநிலைய குழந்தை வைத்திய இணைக்களத்தின் அதி உன்னத கண்டுபிடிப்பு; ஜீவாகாரம்

தயாரிப்பு:
அண்ணா தொழிலகம்,
இணுவில். தொலைபேசி; 021—23412
021—23413



"ரெலிபோன் செய்ய ஏன் எல்லோரும் MCTயையே தேடிப் போகிறார்கள்?"

"இது தெரியாதா? அங்கு போனால் மினைக்கேடில்லை. பாதுகாப்பும் கூட இரவோ பகலோ நிம்மதியாக ரெலிபோன் செய்யலாம்."

"MCT எங்கே இருக்கு?

"இது தெரியாதா? பெரியாஸ்பத்திரிக்கு கிழக்குப்புறத்தில் பருத்தித்துறை வீதி முதலாம் ஒழுங்கையில்."

dyn ads

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

உன் உள்ளத்தை வெண்மீனைப்போல தூயதாக ஆக்க வேண்டும் என இறைவனை வேண்டி, ஒருமுறை தப்பாமல், முழுமனத்துடன் செய்யப்படும் ஜெபத்தின் பலனாக இறைவன் உன்னுடன் பேசுவதை நீ உணர்வாய்.

அன்னை சாரதாதேவி


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 15 சிவகுரு ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.   01-06-86   தொலைபேசி 24805, 22073   த. பெ. 23


## குண்டு வெடிப்புகளும் மக்களின் பாதுகாப்பும்

தென்னிலங்கையின் மூன்றாவது பெரிய குண்டு வெடிப்புச் சம்பவம்! கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது. இம்முறை தனியார் துறையைச் சேர்ந்த ஒரு நிறுவனத்தில் குண்டு வெடிப்பு நடந்தது. அதன் விளைவாக பத்துப் பேர் உயிரிழந்தனர் மற்றும் சுமார் 15 பேர் வரை படுகாயமுற்றார்கள்.

மக்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் மனிதர்களே. அவர்களின் உயிர்கள் ஒரே மதிப்புடையவை. அதாவது நாடு, பிராந்தியம், பிரதேசம், ஊர், மதம், இனம், குலம் என்ற வேறுபாடுகளைக் கடந்த மதிப்புடையவை மனித உயிர்கள் ஏனைய ஜீவராசிகளினது உயிர்களும் அவ்வாறே

ஆகையால் குண்டு வெடிப்புக்கள் மூலம் மக்கள் உயிரிழப்பதை மனிதாபிமானம் உள்ள எவரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள முடியாது

காரணம், நோக்கம், இடம் என்னவாக இருந்தாலும், அப்பாவி மக்களைக் கொல்வதை எவரும் கண்டிக்காமல் இருக்கமுடியாது.

அது ஒரு புறமிருக்கட்டும்

குளிர்பானத் தொழிற்சாலையில் நடந்த குண்டு வெடிப்பிற்குப் பின்னர் இந்த நாட்டின் ஆட்சித் தலைவரான ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆற்றிய உரையை எல்லோரும் கவனத்தில் கொள்ள வேண்டியதாயிற்று.

சாரணர் இயக்க நிகழ்ச்சி ஒன்றில் ஜனாதிபதி உரையாற்றினார் அவர் தமது பேச்சின் பின் கண்டவாறுகத் தெரிவித்தார்

மக்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் ஆபத்து நடக்கக்கூடிய இடங்களை நேரங்களைத் தவிர்த்து முன்னெச்சரிக்கையாக நடக்க வேண்டும் ஆபத்தைச் சமாளித்துக்கொள்ளும் சாரணர்களாக ஒவ்வொருவரும் மாறவேண்டும்.

மக்கள் சுயாதீனமாகவும், சாதுர்யமாகவும் நடந்து தம்மைத் தாமே காத்துக் கொள்ள வேண்டும் என்ற அர்த்தத்தில் ஜனாதிபதியின் பேச்சு அமைந்தது

மக்களைக் காப்பது அரசாங்கத்தினதும் அதிகாரிகளினதும் கடமை அல்ல என்று தட்டிக்கழிப்பதாகவும் இதற்கு அர்த்தம் கூறலாம் அல்லவா?

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பாதுகாப்புக் குறித்து அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் அக்கறை இல்லை என்பது வெள்ளிடைமலை.

யாழ்ப்பாண மக்களைப் பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை அவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி நாம் கவலைப்படவும் முடியாது இவ்வாறு ஜனாதிபதி முன்னர் ஒரு தடவை வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவரிடம் கூறியிருந்தார்.

அந்தச் சொல் செயல் வடிவிலும் காட்டப்பட்டது. வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களைச் சுற்றிய பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்ட போது மக்களின் பாதுகாப்புக் குறித்து அரசு அக்கறைப்படவில்லை

போராளிகளின் தாக்குதலில் இருந்து படைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதற்கே முன்னுரிமை வழங்கப்பட்டது.

அதாவது தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது அரசின் கடமை அல்ல என்பதாகச் சொல்லாலும் செயலாலும் உணர்த்தப்பட்டது

தமிழ் மக்களுக்கு நேர்ந்த கதி தான் தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கும் நேருமோ என்ற சந்தேகம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

அவர்களின் பாதுகாப்பை அரசாங்கம் முற்றுமுழுதாக உறுதிப்படுத்த மாட்டாது. அவரவர் தமது பாதுகாப்பைத் தாமே தேடிக்கொள்ள வேண்டும் என்ற தொனியில் ஜனாதிபதியின் பேச்சு அமைந்திருப்பதாகச் சொல்லலாம் அல்லவா?

மக்கள் எல்லோராலும் சாரணர்களாக முடியுமா? அதற்கும் வயது, சூழல், காலம் என்று எதுவும் தேவையில்லையா?

ஜனாதிபதியின் பேச்சு நாம் கூறும் அர்த்தத்தில் செயல்வடிவம் பெறுமானால் அரசாங்கம் யாருக்காக என்ற கேள்வி எழும். தமிழ் மக்களுக்கு ஏற்பட்டகதி சிங்கள மக்களுக்கும் ஏற்படும்.

மக்களுக்காக அரசாங்கமா, அல்லது அரசாங்கத்துக்காக மக்களா? இதனை தென்னிலங்கை மக்கள் விரைவில் அறியும் காலம் வரலாம்

## கடமைக்குத் திரும்பவில்லை

புங்குடுதீவு. ஜூன்-1

பண்ணைப் பாதையில் போக்குவரத்து தடைப்பட்டதைத் தொடர்ந்து வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவுப் பாடசாலைகளில் கடமையாற்றும் வெளியூர் ஆசிரியர்கள் பலர் கடமைக்குத் திரும்பவில்லை.

இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் தீவுப்பகுதியில் உள்ள பாடசாலைகள், அரச அலுவலகங்கள் அனைத்தும் பெரிதும் பாதிக்கப் படலாமென பொதுமக்கள் அஞ்சுகின்றார்கள்.

## மருந்துத் தட்டுப்பாடு நீங்கியது

வட்டுக்கோட்டை, ஜூன் 1

இவ்வருடத்திற்கான மருந்து வகைகள் பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய், காரைநகர் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு அண்மையில் விநியோகம் செய்யப்பட்டன

இந்த விநியோகத்தை அடுத்து இவ்வைத்தியசாலைகளில் நிலவிவந்த மருந்துத் தட்டுப்பாடு தற்போது நீங்கியுள்ளது

இந்த மருந்து வகைகளை யாழ் சுகாதாரத் திணைக்கள மருந்துக் களஞ்சியப் பகுதியினர் நேரடியாக லொறிமூலம் கொண்டு சென்று விநியோகம் செய்தனர்.

# மாணவர் தலைவர் சுட்டுக் கொலை

## பாகிஸ்தானில் புதிய நெருக்கடி

இஸ்லாமாபாத், மே 31

பாகிஸ்தானிலுள்ள சிந்து மாகாணத்தில் பொலிஸார் சுட்டதில் மாணவர் தலைவர் ஒருவர் பலியானார்

பெனாஸிர் பூட்டோவின் மக்கள் கட்சியின் ஆதரவாளர் இவர்.

நாட்டில் மீண்டும் இராணுவ சட்டத்தை உறுதிப்படுத்தவே பாகிஸ்தான் ஜனாதிபதி முயல்கின்றார் எனவும் அதனாலேயே வன்முறைச் சம்பவங்களை தூண்டிவிடுகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சிந்து மாகாணத்திலுள்ள ஹைதரோமபாத் நகரில் தமது தங்கும்விடுதியிலிருந்து வெளியே புறப்படத் தயாராக இருந்த பொழுது சிந்து மாகாண மாணவர் தலைவர் பொலிஸாரால் சுடப்பட்டு அதே இடத்தில் பலியானார்.

சம்பந்தப்பட்ட பொலிஸார்மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் கட்சித் தலைவர் பெனாஸிர் பூட்டோ கருத்து வெளியிட்டார்.

மீண்டும் இராணுவச் சட்டம் கொண்டு வருவதை உலகநாடுகள் கண்டிக்காத வண்ணம் பாதுகாப்பதற்காகவே ஜனாதிபதி ஸியா வுல்ஹக் வன்முறைகளைத் தூண்டிவிடுகின்றார் எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

## அப்கானில் 30 பேர் பலி

காபூல், மே. 31

ஆப்கானிஸ்தானில் ஆளும் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சுமார் முப்பது பேர்கள் கெரில்லாத் தாக்குதலுக்குப் பலியானார்கள்.

முஜாஹீன் இயக்கக் கெரில்லாக்களே இத்தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலியானவர்கள் அனைவரும் பஸ் ஒன்றில் பயணம் செய்ததாகவும், அப்பொழுது அவர்கள் மீது துப்பாக்கிகளாலும் மோட்டர் ஷெல்களாலும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஆப்கான் அறிவித்தது.

## தைவானில் பூமி அதிர்ச்சி பலர் மரணம்

தைபே, மே. 31

தைவானின் தலைநகரில் இருந்து சுமார் 124 மைல் தூரத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி காரணமாக பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

பாரிய கற்பாறைகளுக்குள்ளும் சேற்றிலும் சேற்றினுள்ளும் புதையுண்ட சடலங்களில் 28 இதுவரையில் மீட்கப்பட்டுள்ளன.

மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

பூமியதிர்ச்சி இடம்பெற்ற இடம் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இடமாக இருந்துவந்தது.

## சமஷ்டி ஆட்சி முறையே சரியான தீர்வு என்கிறது லண்டன் சஞ்சிகை

லண்டன், ஜூன். 1

சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டு வருவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசு தீர்வு காண முயலவேண்டும்.

இப்படி லண்டன் எகானமிஸ்ட் சஞ்சிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் கூறியுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் திரு. ஜெயவர்த்தனா தொடர்ந்து தவறிழைத்துக் கொண்டே போகிறார். விரைவில் ஓர் அரசியல் தீர்வைக்கண்டாக வேண்டும். சமஷ்டி அரசமைப்பு ஒன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முன்வர வேண்டும்.

இப்படி ஆசிரியர் தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளது.

## இரவில் தாதி பகலில் பூதம்

லண்டன், மே.31

லண்டன் அண்மித்த ஆஸ்பத்திரி ஒன்றில் இரவு வேளைகளில் தாதியாகப் பணிபுரியவர், பகலில் பிரேதம் அடக்கம் செய்யும் நிலையத்தை பராமரித்து வருவதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

டேப்பின் கோள்டென் என்ற இந்த மாதுவின் செயலால் நோயாளர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இவரைப் பார்க்கும் போது "பூதம்" ஒன்றைப்பார்க்கும் ஞாபகம் வருவதாக அவர்கள் தெரிவித்தார்கள்.

## ஆஸ்திரேலியாவில் பிறக்கும் வெளிநாட்டவரின் சிசுக்கள் நிரந்தர குடியுரிமை இல்லை

கன்பெரா, மே. 31

ஆஸ்திரேலியாவில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் நிரந்தரக் குடியுரிமை பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் இத்தீர்மானத்தை நிறைவேற்றியது.

பல்லாயிரக்கணக்கானவர்கள் ஆஸ்திரேலியாவில் குடியேறச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

ஆனால் இவர்களை முந்திக்கொண்டு சட்ட விரோதமாகக் குடியேறியவர்கள் ஏற்கனவே தமக்கு ஆஸ்திரேலியாவில் பிறந்த பிள்ளைகளின் நிரந்தர குடியுரிமை வசதிகளைச் சாதகமாக்குகின்றார்கள்.

1984 ஆம் ஆண்டில் மட்டும் வெளிநாடுகளைச் சேர்ந்த சுமார் 7,500 குழந்தைகளுக்கு ஆஸ்திரேலியா நிரந்தர குடியுரிமை வழங்கியது.

தென்மேற்கு பசுபிக் பிராந்தியத்திலிருந்தும், தென்கிழக்கு ஆசியநாடுகளிலிருந்தும் ஏராளமானவர்கள் இதுவரை இச்சலுகையால் பயன் பெற்று வந்தனர்.

## கராச்சியில் குண்டு வெடிப்புகள்

இஸ்லாமாபாத், மே.31

கராச்சியில் உள்ள பிரபலமான விமான சேவைக் காரியாலயங்களில் வைக்கப்பட்டிருந்த 'வெடிகுண்டு' ஆறு பேரைக் காயப்படுத்தியது. ஒருவர் படுகாயங்களுடன் பலியானார்.

தாஜ்மகால் ஹோட்டலில் உள்ள அமெரிக்க விமானக் காரியாலயமான 'பான்அம்' மீது முதலாவது குண்டு வெடித்துச் சிதறி, காவலாளியை பலியாக்கியதுடன், வேறு நால்வரை காயமடையச் செய்தது.

பலமணி நேரத்துக்குப்பின் சவூதி அரேபிய விமானக் கந்தோரும் குண்டுவெடிக்கு இலக்காகி இருவரைக் காயப்படுத்தியது.

இதுவரை எவருமே உரிமை கோராத இச்சம்பவங்களில், ஆள்நடமாட்டம் குறைவாக இருந்ததாலேயே உயிரிழப்பும் குறைந்தது.

## வெளி உலகில்

## தொல்புரத்தில் சட்டவிரோத மின்பாவனை

யாழ்ப்பாணம், ஜூன். 1

தொல்புரம் பகுதிகளில் சட்டவிரோத மின் பாவனையாளர் அதிகரித்து வருவது குறித்து தொல்புரம் சமாதான சபையிடம் முறையிடப் பட்டுள்ளது.

தொல்புர சமாதான சபைத்தலைவரும் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரியுமான கே. சந்திரராஜா இதனைத் தெரிவித்தார்.

சட்டவிரோத மின் பாவனையால் டிரான்ஸ் போமர் பழுதடைகிறது. மாணவர்கள் இரவில் படிக்கமுடியாது கஷ்டப் படுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

நல்ல சுகவாழ்வு பெற

# இலைசேர் பாற்கஞ்சி ஜீவாதாரம்

## சிறந்த சத்துணவுகள்

சமநிலைப்படுத்தப்பட்ட போதியளவு சத்துணவானது உடலின் அனுசேப இயக்கங்களுக்கும் வளர்ச்சிக்கும் தொழிற்பாடுகளுக்கும் இன்றியமையாததொன்றாகும்.

கருப்பையில் சிசுவின் உற்பத்தி ஆரம்பமாகும் போது ஆரம்பிக்கும் மூளை வளர்ச்சியானது முதல் மூன்று வருடங்கள் பூர்த்தியடையும் போது பூரணமாகிறது.

சிசுவின் வளர்ச்சியானது கருப்பையில் கடைசி மூன்று மாத காலத்தில் குறிப்பிடத்தக்கவளர்ச்சியைக் காண்பித்து பின்பு ஒழுங்கான நிலையான வளர்ச்சியானது பால் பருவத்திலும் குழந்தைப் பருவத்திலும் நடைபெறுகின்றது.

கர்ப்பத்தாய்மார்களில் ஏற்படும் மந்த போசணை காரணமாக அநேகமான சந்தர்ப்பங்களில் நிறை குறைவான குழந்தைகள் பிறக்கின்றன.

பிரசவத்தின் போது பிறக்கும் நிறை குறைவான பிள்ளைகளும் மந்த போசணையுடைய குழந்தைகளும் பிள்ளைகளும் அதிகளவில் நோய்க்கிருமிகளின் தொற்றுதலுக்குட்படுகின்றன.

உதாரணமாக இரைப்பைகுடல் அழற்சி க்ஷயரோகம், குக்கல், நிமோனியா போன்ற நோய்கள் உண்டாகின்றன. மேற்கூறிய காரணங்களினால் பிள்ளைகள் உருந்தி இறக்க நேரிடுகிறது.

எனவே மந்த போசணையுடைய பிள்ளைகளுக்கும் கர்ப்பத்தாய்மார்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் மேலதிக உபஉணவுவழங்குதல் இன்றியமையாத தொன்றாகும்.

இந்த உப உணவானது சமநிலைப்படுத்தப்பட்ட ஓர்போஷாக்குஉணவாக இருப்பதுடன் மலிவாகவும் இலகுவில் உள்ளூரில் கிடைப்பதாகவும் இருக்கின்றது.

### ஆரம்ப சுகாதார ஆராய்ச்சிப் பிரிவு யாழ் போதனா வைத்தியசாலை

யாழ். போதனா வைத்தியசாலையின் ஆரம்ப சுகாதார ஆராய்ச்சிப் பிரிவு நல்ல சமநிலைப் படுத்தப்பட்ட இரு உப உணவுகளை அறிமுகப் படுத்தி இருக்கின்றது. அவையாவன:-

(1) இலைசேர் பாற் கஞ்சி.

(2) ஜீவாகாரம். (அரிசி, சோயா, உழுந்து கலவை)

**இலை சேர் பாற் கஞ்சி**

இதனைத் தயாரிப்பதற்குப் பின்வரும் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1 கிலோ பச்சை அரிசி, 1 முழுத் தேங்காய்த்துருவல் (400கிராம்) சீனி 175 கிராம், மாஜரின் 50 கிராம், பச்சை இலை (ஏதாவது கீரை வகை) ஒன்று 175 கிராம், சிறிதளவு உப்பு என்பனவற்றைச் சேர்த்து சமைக்கலாம்.

முதலில் அரிசியை நன்கு வேக வைத்து பின் ஏனைய பொருள்களைச் சேர்க்க வேண்டும். அத்துடன் இலை சேர் பால் கஞ்சியின் போஷாக்கின் தரத்தை உயர்த்துவதற்காக 400 கிராம் பால் மாவும் சேர்க்கலாம். சமைத்த 100கிராம் இலை சேர் பால் கஞ்சியில் 10கிராம் புரதமும் 380 கிராம் கலோரி சக்தியும் உண்டு.

1—6 வயதுடைய சிறுவர்களுக்கு 100 — 150 கிராம் இலை சேர் பாற் கஞ்சியானது போதுமானதாகும்.

**ஜீவாகாரம்**

(அரிசி, சோயா, உழுந்து மா கலவை.)

ஜீவாகாரமானது ஏற்கனவே தயாரித்த ஓர் சிறந்த உப உணவாகும்.

ஜீவாகாரமானது பொரி அரிசி மா 65 வீதமும், கோது நீக்கி வறுத்த சோயா மா —25வீதமும் வறுத்த உழுந்து மா — 10வீதமும் சேர்த்து விஞ்ஞான முறைப்படி சுகாதாரமான முறையில் நன்கு அரைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது.

100கிராம் ஜீவாகாரத்தில் 16·5கி. புரதமும் 400கி, கலோரி சக்தியும் உள்ளது.

ஜீவாகாரமானது ஆரம்ப முதலுணவு கொடுக்கத் தொடங்கிய குழந்தைகளுக்கும் (அதாவது 4 மாதவயது பூர்த்தியடைந்த குழந்தைகளுக்கும்) மற்ற போஷாக்குடைய பிள்ளைகளுக்கும் கர்ப்பத் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இலகுவில் சமிபாடடையக்கூடியதாகவும் விரும்பி உண்ணக் கூடியதுமான அதிசிறந்த ஓர் உபஉணவாகும்.

அத்துடன் சகல வயதினரும் இந்த ஜீவாகாரத்தை மாப்பொருளாக பயன்படுத்தலாம்

(4ம் பக்கம் பார்க்க)



## பொய்யாமொழி

குறள்

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்

பொருள்:

பிறர்க்கு உதவியாகக் கொடுக்கப்படும் பொருளைக் கண்டு பொறாமைப்படுகின்றவனுடைய சுற்றம், உடையும் உணவும் இல்லாமல் கெடும்.

# நம்மை நாமே அவருக்கு ஜீவபலியாய் ஒப்படைப்போம்

கடவுளை நம்பி பயமின்றி வாழ்வோர் மாத்திரமே சரீர ஆர்ம சுகம் பெற்று நீடூழி காலம் நோயற்று வாழமுடியும்.

தீய பழக்கங்களான நஞ்சுகளை தேவாலயமான நமது சரீரத்தினுள் துணிகரமாக ஏற்று அதைக் கெடுத்தால் கடவுள் அந்த மானிடரை மன்னியாமல் கெடுத்துப் போடுவார் என்று வேதம் எச்சரிப்புத் தருகிறது. (உபா 29: 18-19 1 கொரி 3: 16, - 17)

கடவுள் தான் சரீரசுகமும், ஆத்மசுகமும் அளிக்கிறவர். ஆகையால் அவரே பெரும்பரிகாரி.

கடவுள் தான் சரீர சுகத்தை, தமது வார்த்தையால் உண்டாக்கின இயற்கையின் மூலமாக மானிடருக்குத் தருகிறார்.

சில சமயங்களில் தமது சித்தப்படி இயற்கைக்கு மேலாக, கைவிடப்பட்ட நோய்களை அற்புதமாகவும், சடுதியாய் சொஸ்தப்படுத்துகிறார்.

## ஞானக்கதிர்

சாதாரணமாக இயற்கையில் சொஸ்தமாகக் கூடிய நோய்களை, கடவுள் அற்புதமாய் சடுதியாய் சொஸ்தமாக்காமல், இயற்கையில் படிப்படியாக சொஸ்தமாக விட்டுவிடுகிறார்.

ஆகையால் நாம் சொஸ்தப்பட இயற்கையை தேவநாமத்திற்கு மகிமையாக உபயோகித்து,அல்லது அவர் சித்தப்படி சடுதியாய் அற்புதமாக, சொஸ்தமாகி, அவரை மகிமைப் படுத்தவேண்டும்.

ஆனால் ஆத்ம பாவ நோய்க்கு இயற்கையின் உதவி இல்லாமலே, தேவன் தமது குமாரன் மூலமாய், ஆவியானவரைக் கொண்டு, தமது வசனத்தின் ஏதுவால் மாத்திரம் சொஸ்தப் படுத்துகிறார்.

பரலோக, பூலோக குடும்ப ஒற்றுமை:

பரலோக குடும்பத்தராகிய கடவுள் பூலோக குடும்பத்தாரை, தமது சாயலாகவும், தமதுருபத்தின் படியேயும் சிருஷ்டித்தார்.

இவர்கள் தம்மைப் போல் சுகமாய் இருக்கத் தக்கதாக முதல் தரமான ஆகாரமாகிய விதைகளையும் காய், கனிகளையும் கீரை வகைகளையும் கொடுத்தார்.

ஆதாமின் பாகமாகிய எலும்பிலிருந்து ஏவாளையும் இவர்கள் இருவரால் சந்ததியும் ஏற்படசித்தங் கொண்டு ஆசீர்வதித் தருளினார்.

பிதா, மாதா, சந்ததி என்ற இந்த சிருஷ்டியான மூன்றையும் ஆதியில் ஒன்றிலிருந்து ஒவ்வொன்றாய் தோன்றச் செய்து ஒன்றாகவே இருக்கச் செய்தார்.

ஆகையால் நாம் இந்த மெய்யான பரிசுத்த கடவுளின் நாமத்தைப் பரிசுத்தப்படுத்தி அவரின் இரத்தத்தால் பாவமன்னிப்புப் பெற்று அவரின் வல்லமையின் ஆவியினால் பரிசுத்தமாக எங்கள் சரீரத்தைப் பாதுகாத்துக் கொள்வோமாக.



தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர்! பரிசுத்தர்! பரிசுத்தர்! பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று சிருஷ்டிகளாகிய நாம் நம்மை தரைமட்டும் தாழ்த்தி, சிருஷ்டிகராகிய அவரை உயர்த்தி துதித்து, தொழுகை செய்து ஸ்தோத்திரித்துப் போற்றுவோமாக.

இந்த பிதாக்குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்

(4ம் பக்கம் பார்க்க)

போதகர். ஜெ. ஞானசேகரன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

A Very Special Offer
Complete ICMA in four years
WITHOUT G.C.E. O/L & A/L
For Consultation and Course Guidance
Cantabia Institute
(Shoot of Oxonia, Colombo)
31, MAIN STREET, JAFFNA.
T'Phone 24201

# உதயன்

01 06 1986 ஞாயிற்றுக்கிழமை

LONDON EXAMS
I.C.M.A. - A   A.A.T. (Inter)
I.C.M.A. - B   I.A.B. (Foundation)
I.D.P.M. - I   I.A.B. (Inter)
A.A.T. - (Prelim)   I.A.B. (Final)
Classes by qualified and experianced panel of lecturers commence from 7th June 86
Cantabia Institute
(Shoot of Oxonia, Colombo)
31 MAIN STREET, JAFFNA.
T'Phone: 24201

## வித்தாரம்

என்ன, முரளித் தம்பி, உயிர் பிழைத்து இருக்கிறீரோ!

யாழ்ப்பாணம் ரவுணிலே இரவு பகல் எண்டு பாராமல் குண்டு மாரியும், ஷெல் மாரியும் பொழிஞ்சலை.

உனக்கு என்ன நடந்திது, எது நடந்திது எண்டு யோசிக்க முடிஞ்சுதே ஒழிய வந்து பாக்க நேரம் கிடைக்கயில்லை அப்பா.

நான் வரமுடியவில்லை எண்டா நீ ஒருக்கா வரக்கூடாதே. அந்தப் பழக்கம் தான் உன்னிட்டை இல்லையே.

ஏதோ நாள் முழுதும் வேலை இருக்கிற ஆள் மாதிரி நீ ஒரே பிஸி. எனக்கெண்டாப் புரியவில்லை. அப்பிடி என்ன பிஸியோ நான் அறியேன்.

இந்தக் காலத்துத் தம்பிமார் எல்லாம் எப்பவும் பிஸியாத்தான் இருப்பினம். அதை விடு. அவை பிஸியா இருக்கிறதாலை தானே உலகத்தின்ரை கண்ணே இஞ்சை திரும்புது . . .

உனக்குத் தெரியுமே, யாழ்ப்பாணத்திலை நடந்த குட்டி யுத்தத்திலை ஆருக்கு வெற்றி ஆருக்குத் தோல்வி எண்டதை அறியிறதிலை வெளிநாடுகள் பலவும் வெகு அக்கறையாக இருந்தவை எண்டு!

உவர் அச்சாணியார் தாங்கள் தான் ஏதோ வெண்டுவிட்டதாக வாய்ஜாலம் பண்ணினர். ஆனால் உலகம் நம்ப வேணுமே . . . !

கொழும்பிலை இருக்கிற வெளிநாட்டுத் தூதரகங்கள் எல்லாம், எங்கடை பொடியள் எப்பிடி நிண்டு பிடிச்சவை. இனியும் ஒருக்கா அப்பிடி வந்தால் நிண்டு பிடிப்பினமோ எண்டெல்லாம் வெகு அக்கறையா தங்கடை வட்டாரங்களாலை அறிஞ்சினம்.

எங்கடை தம்பிமாற்றை கெட்டித்தனத்தை இந்துவிலை ரெட்டி எழுதியிருந்தார் பாக்கயில்லையே.

வெளிநாடுகள் குட்டி யுத்தத்தை எப்பிடி எடை போட்டிருக்கினம் எண்டதுக்கு அது ஒரு 'சிம்பிள்' உதாரணம் எண்டு வையேன்!

* * *

தெற்காலை குண்டு வெடிப்புகள் அடுத்தடுத்து நடக்கிறதுக்கு இரண்டொரு நாளைக்கு முன்னுக்கு, கொழும்பிலை வெளிநாட்டு ராஜதந்திர வட்டாரங்களிலையும் சர்வதேச செய்தி ஸ்தாபனங்களிலையும் ஒரே பெரிய வதந்தி ஒண்டு அடிபட்டதாய் கேள்வி.

சம்பந்தப்பட்ட "காரியம்" எங்கோ ஒருவெளிநாட்டிலை நடந்துவிட்டதாகவும் பரவலாய்க் கதை அடிபடுதாம்.

இந்தியாவிலை அந்தக் "காரியத்தை" செய்துவிட்டதாகவும் ஒருகதை வந்ததாம் பிறகு இந்திய அரசாங்கம் அதுக்கு அனுமதிக்கயில்லை எண்டும், எந்த நேரமும் பிரிட்டனிலை வைச்சு அந்தக் "காரியம்" நடக்கும் எண்டும் வெளிநாட்டுத் தூதரக வட்டாரங்கள் 'ஓஹோ' எண்டு பேசிக்கொண்டிருக்கினமாம்.

கொழும்பிலை அரசாங்கத்தின்ரை காதிலை இது விழாமலே போயிருக்கும் . . ?

என்னடா இவர் பெரிய "சஸ்பென்ஸ்" அடிச்சுக் கொண்டு போறார் எண்டு நீ நினைக்கிறாய் போலை.

அந்த சஸ்பென்ஸ் U. D. I.

விளங்கினால் விளங்கிக் கொள். அல்லாட்டால் விஷயம் தெரிஞ்சவயிட்டை கேட்டு அறி. சரி மீண்டும் சந்திப்போம்.!

ஜெகண்டேடி

# இந்தியாவின் நல்லாதரவு தொடர்ந்து தேவை

## டிக்ஸிற்றிடம் ஜே. ஆர்.

கொழும்பு, ஜூன் 1

* இந்தியாவின் நல்லாதரவு தொடர்ந்து தேவை.

* அரசுப் பிரதிநிதிகளை புதுடில்லிக்கு அனுப்பவும் தயார்.

* முன்னைய யோசனைகளுக்கு மேலும் விளக்கங்கள், புதிய வழி முறைகளை சமர்ப்பிக்கவும் தயார்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன, கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற்றிடம் தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஜனாதிபதியை திரு. டிக்ஸிற் சந்தித்துப் பேசினார். சந்திப்பு 45 நிமிடங்கள் நீடித்தது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் நல்லாதரவு தொடர்ந்து இலங்கைக்குத் தேவைப்படுகிறது.

இந்திய முயற்சிகள் இதுவரை நல்ல பலனளித்துள்ளன.

இந்திய முயற்சியில் இலங்கை இன்னும் நம்பிக்கை வைத்துள்ளது.

பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண பிரதிநிதிகள் குழு ஒன்றை புதுடில்லிக்கு அனுப்பவும் இலங்கை அரசு தயாராக உள்ளது.

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளுக்கு மேலும் விளக்கங்கள் கொடுக்கவும், புதிய வழிமுறைகளைச் சமர்ப்பிக்கவும் அரசு தயாராக உள்ளது.

இப்படி திரு. ஜெயவர்த்தன திரு. டிக்ஸிற்றிடம் குறிப்பிட்டார்.

தீவிரவாதிகளின் செயல்களினால் அப்பாவிக் குடியானவர்கள் உயிரிழந்து வருகின்றனர் என்பதை பிரதமர் ராஜீவிடம் கூறும்படி திரு. டிக்ஸிற்றை திரு. ஜெயவர்த்தன கேட்டுக் கொண்டார்.

## உதயதேவி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் கூறின.

காயமடைந்தவர்களில் இரண்டு பேர், கொழும்பு ஆஸ்பத்திரியில் நேற்று இரவு மரணமானார்கள்.

காயமடைந்தவர்கள் ருகம, வத்துப்பிட்டிவல ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

## இலைசோ

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தயாரிக்கும் முறை:-

1—2 கரண்டி ஜீவாகாரத்தை சீனியுடன் கலந்து சுடுநீர் அல்லது பாலுடன் சேர்த்துக் களி போலச் செய்து கரண்டியினால் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம்.

வளர்ந்த பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் தேவையான அளவு ஜீவாகாரத்துடன் தேங்காய்த் துருவல், சீனி, சுடுநீர் அல்லது பாலுடன் சேர்த்து உருண்டைகளாகச் செய்து உண்ணலாம்.

சீனி, தேங்காய், பால் சேர்ப்பதால் உப உணவின் தரமும் உயர்த்தப்படுகின்றது.

இவ் உப உணவானது உள்ளூரில் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஓர் உன்னத உபஉணவாகும்.

ஜீவாகாரத்தை வீட்டில் தயாரிக்கலாம் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இலைசோ பால் கஞ்சியானது எந்த வீட்டிலும் இலகுவில் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டு தயாரிக்கக் கூடியது.

உங்கள் குழந்தைகளுக்கும் கொடுத்து அவர்களின் வளர்ச்சியைக்கூட்டி சிறந்த ஆரோக்கியமான ஓர் சமுதாயத்தை அமையுங்கள்.

## மூதூர்-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது தரப்பினரும், ஈரோஸ் தரப்பினரும் அருகருகே கண்ணி வெடிகளை வைத்து விட்டுக் காத்திருந்தோம்.

அவ்வழியே வந்த இராணுவத் தொடரின் மீது கண்ணிவெடிகளை வெடிக்கச் செய்ததில், அங்கு ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக நாம் இத்தாக்குதலை மேற்கொண்டதாக தவறுதலாக உரிமை கோரப்பட்டது.

ஈரோஸ் இயக்கத்தினர் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலின்போது 20க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியானதற்கு எமது இயக்க சார்பில் பாராட்டுகளைத் தெரிவிக்கின்றோம்

இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நம்மை நாமே

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தினாலே தீட்சைபெற்ற நாம் இவரின் குணத்திற்கேற்ற விதமாய் நடந்து கொள்ள, நம்மை நாம் அவருக்கு ஜீவபலியாய் ஒப்படைப்போமாக.

இதுதான் நாம் அவருக்குச் செலுத்தத்தக்க புத்தியுள்ள ஆராதனையாயிருக்கின்றது.

(எபே 3:14-19 ரோம 12: 1—3)

# மண்டைதீவு மகாவித்தியாலயம் மூடிக்கிடக்கிறது

மண்டைதீவு, ஜூன் 1

மண்டைதீவு மகாவித்தியாலயம் ஒரு வாரமாக மூடப்பட்டுள்ளது.

இங்கு கடமையாற்றும் வெளியூர் ஆசிரியர்கள் இங்கு வரமுடியாத நிலையில் இருப்பதாலேயே இவ்வித்தியாலயம் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் 4-ஆம் திகதி வரை இவ் வித்தியாலயம் மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெற்றோர்கள் மிகுந்த கவலையடைந்துள்ளார்கள்.

வெளியூர் ஆசிரியர்கள் இங்குள்ள மாணவர்களின் கல்வித்தரம் பாதிக்கப்படாத வகையில் இங்குவந்து தங்கி சேவையாற்ற வேண்டும் என்று பெற்றோர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

தினசரி மூன்று நான்கு தடவை படகுச் சேவைகள் நடைபெற்று வந்தும் இவ் ஆசிரியர்கள் கடமைக்கு வராதது குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது.

## லொறிகள்--

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

டியாக நடைமுறைப் படுத்தப்படும்.

யாழ்ப்பாணத்துக்கு செல்லும் லொறிகள் பொருள்களுடன் செல்ல அனுமதிக்கப்படும்.

* இரண்டாவது கட்ட நடவடிக்கையாக நடைமுறைப்படுத்தப்பட இன்னொரு தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி குடா நாட்டில் இருந்து வெளியே செல்லும் லொறிகளில் கொண்டு போகப்படும் பொருள்கள் முழுவதும் ஆனையிறவு முகாமில் இறக்கப்படும். பரிசோதனைக்குப்பின்னரே லொறியில் அப்பொருள்களை ஏற்ற அனுமதிக்கப்படும். இறக்கி, ஏற்றும் வேலைகளைச் செய்ய தடுப்பு முகாமில் ஆட்கள் இருப்பர். ஆனால் லொறி உரிமையாளர்களே அவர்களுக்கு உரியசம்பளத்தை வழங்க வேண்டும்.

இந்த இரண்டாவது கட்ட நடவடிக்கை எப்போது இருந்து அமுலுக்கு வரும் என்று தெரிவிக்கப்படவில்லை.

(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்.)

## உயிர்தப்ப

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வம் ஏற்பட்டிருக்காது.

ஒருவாரத்துக்கு முன்னரே இதுபற்றி எச்சரிக்கப்பட்டது. கொம்பனித் தெருபொலீஸ், தொழிற்சாலை நிர்வாகத்துக்கு இதுபற்றி ஒரு வாரத்துக்கு முன்னரே கூறிவிட்டது.

இப்படி அமைச்சர் சொன்னார்.

## கல் ஏற்றி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கல் வளம் கிடையாது. ஆகவே இங்கு தேவையான பல தரப்பட்ட கற்களும் யாழ்ப்பாணத்திலிருந்தே வரவேண்டி உள்ளது.

## கோல்ட் ஸ்ரோர்ஸ்...

மூலமாக்கப்பட்டது.

இக் களஞ்சிய முதலீட்டில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குக் கணிசமான அளவு முதலீட்டுப் பங்கு இருப்பதும் மாதாந்தம் வரும் இக்களஞ்சிய வருமானத்தில் 8விதம்தேசிய பாதுகாப்பு நிதியத்துக்கு வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆறுவார காலத்திற்குள் அடுத்தடுத்து அநுராதபுரத்திலும், திருகோணமலையிலும், கொழும்பிலுமாக விசேஷ வெடிபொருள் கொண்டு எம்மால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பின்னால் "இனப்பிரச்சினையை உடனடியாகத் தீர்க்காவிட்டால் நாடே அழிந்துவிடும்" என்ற ரொனி டி மெல்லின் அவலக்குரலும், "பாதுகாப்புப் படைகளின் கவலையீனமே இவற்றிற்குக் காரணம்" என்ற லலித் அத்துலத் முதலியின் குற்றச்சாட்டும், "மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்" என்ற ஜெயவர்த்தனவின் இயலாமைப் பேச்சும் இப்போது வெளிவரத்தொடங்கியுள்ளன.

இராணுவ பலத்தைப் பெருக்குவதாலும், அவர்களைக் கட்டவிழ்த்து விடுவதாலும் தலைதூக்கும் அரச பயங்கரவாதத்தால் எமது போராட்டம் அழிக்கப்படமுடியாதது என்பது நிச்சயம்.

இவற்றை உணராது, தற்போதைய சூழ்நிலையைத் தந்திரமாகக் கையாண்டு மீண்டும் இராணுவ வன்முறைகள் ஏவிவிடப்படுமாயின் எமது இராணுவ நடவடிக்கைகள் மேலும், மேலும் விரிவடைவது தவிர்க்க முடியாததாகும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நூலக இயக்கம்

## கருத்தரங்கு இன்று

நல்லூர், ஜூன் 1

யாழ் நூலகம் எரிக்கப்பட்டதன் ஞாபகார்த்த தினத்தையொட்டி இன்று முதலாம் திகதி "நூலக இயக்கம்" என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றுநடைபெறும்

இன்று காலை 10 மணிக்கு நல்லூர் இந்துவிடுதியில் இக்கருத்தரங்கு நடைபெறும்

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்.

திரு கு. நேசையா (முன்னைநாள் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்) திரு வே. பாக்கியநாதன், (எம் எஸ். சி அதிபர்தொழில் நுட்பக் கல்லூரி, கொழும்பு), திருமதி கு பரராஜசிங்கம் எம் ஏ (சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்), திரு கா மாணிக்கவாசகர் (நூலகர், யாழ் மத்திய கல்லூரி), திரு என் செல்வராஜா (நூலகர், ஈவ்லின் இரத்தினம் பல்கலை நிறுவனம்) ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்

புதன்கிழமை மாலை 3 மணிஅளவில் கண்டுக்குளி வை. எம் சி ஏ மண்டபத்தில் இதுசம்பந்தமாகக் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெறவுள்ளது

## தமிழ் நாடு

( 1-ம் பக்கத்தொடர்ச்சி)

னங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. பகல் சினிமாக் காட்சிகள் நடைபெறவில்லை.

ஏற்கனவே முடிவு செய்ததற்கு இணங்க திராவிட முன்னேற்றக்கழகத் தொண்டர்களும் தமிழ் நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தினர்.

திருச்சி காந்தி அங்காடியில் இருந்து தேவர் அரங்குவரை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை தி.மு.க. தொண்டர்கள் நடத்தினர்.

இதுபோன்ற பேரணி ஒன்று புதுக்கோட்டையிலும் தி.மு.க.தொண்டர்களால் நடத்தப்பட்டது.

## அஞ்சலி கூட்டம்

நல்லூர், ஜூன் 1

சரத் முத்தெட்டுவேகமவுக்கு இன்று மாலை 3 மணிக்கு சங்கானை பொதுசன நூலகத்தில் நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெறுகிறது.

விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

## பண்ணை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

இதே வேளை நேற்று யாழ் நகர் மத்தியில் உயரப் பறந்து கொண்டிருந்த ஹெலிக்கொப்டரில் இருந்து துண்டுப் பிரசுரங்களும் வீசப்பட்டன.

அதி உயரத்தில் இருந்து வீசப்பட்ட இந்தத் துண்டுப் பிரசுரங்கள் அதிக தூரத்திற்கு பறந்து சென்றன.

## முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் வட்டிக்குப் பணம் கொடுத்துப் பாதிக்கப்பட்டவர்கள் தயவுசெய்து உடனடியாகப் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்:

இல 5', வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

## பிரயாண ஒழுங்கு

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு விசாவுடன் பிரயாணம்

* சவூதி நாடு: காகித ஆலை பராமரிப்பு, நிர்மாணம் உற்பத்தி சார்ந்த எல்லாத் தரத்திலும் வேலை வசதியுடன் பிரயாண ஒழுங்கு இரு வாரத்தில்.

ஆஸ்பத்திரி உதவியாட்கள் ஆண், பெண். உடன் பயண ஒழுங்கு செய்யப்படும்.

* சைப்பிரஸ் நாடு: சாரதிகள்
பெண்கள் விடுதி பணிப்பெண்களுக்கு ஒரு வாரத்தில் பயண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

* டென்மார்க்: எமது முகவர்கள் அழைத்துச் செல்வார்கள்.

பாஸ்போட் படங்களுடன் தொடர்பு கொள்ளவும்:

R. K. பரமசுவாமி (பவானி)
இணுவில் ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
இணுவில்.



யாழ்நகரிலே ஆறு ரெலிபோன்களைச்

சேவையில் ஈடுபடுத்தி முழுமையாக ரெலிபோன் சேவையிலேயே

கண்ணும் கருத்தும் உள்ள ஒரே ஒரு நிறுவனம்

ரெலிகுளோப்!

ரெலிகுளோப் ரெலிபோன்: 25088

ஆறு சமாந்தர லைன்கள் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 1-06-1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15, Second Lane, Power House Road, Jaffna, Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number Q J 60 /86